பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை

## சிறுபான்மையினர் நலன்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023 – 2024

## மானியக் கோரிக்கை எண். 9


# செஞ்சி கே.எஸ். மஸ்தான்
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு | 8 |
| 3. | கல்வி உதவித் தொகை | 9 |
| 4. | சிறுபான்மையினர் விடுதிகள் | 27 |
| 5. | முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் | 38 |
| 6. | கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் | 41 |
| 7. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 44 |
| 8. | கிராமப்புற சிறுபான்மையின மாணவியர்களுக்கான ஊக்கத்தொகை வழங்குதல் | 52 |
| 9. | சிறுபான்மையினருக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குதல் | 53 |
| 10. | 5 புதிய மாவட்ட சிறுபான்மையினர் அலுவலகங்கள் துவங்குதல் | 54 |
| 11. | ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி | 54 |
| 12. | கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய | 56 |

| | | |
|---|---|---|
| | உதவி அளிக்கும் திட்டம் | |
| 13. | கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல் | 57 |
| 14. | கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 58 |
| 15. | மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல் | 58 |
| 16. | பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் | 59 |
| 17. | பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் ) | 62 |
| 18. | சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து | 67 |
| 19. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 68 |
| 20. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 71 |
| 21. | தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) | 82 |
| 22. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 83 |
| 23. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 109 |
| 24. | இணைப்பு | 121 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

# சிறுபான்மையினர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு - 2023-2024

### முன்னுரை

தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தில் வாழும் சிறுபான்மையினரின் நலனை பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் முன்னோடியாக உள்ளது. சமமான வாய்ப்பை வழங்குவதன் மூலமும், அவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் ஏற்படுத்துவதன் மூலமும்

சிறுபான்மையினரின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது.

பல்வேறு பிரிவினரிடையே மதநல்லிணக்கத்தை பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. சிறுபான்மையினர் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு "பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை" "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை" என மாற்றப்பட்டது. “தமிழ்நாடு சிறுபான்மையினர்

பொருளாதார மேம்பாட்டுக் கழகம்" 1999 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மேலும், அதே ஆண்டில், வக்ஃப் நிறுவனங்களை பழுதுபார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ஆண்டு மானியம் வழங்கும் திட்டம் புதிதாக தொடங்கப்பட்டது. 2007ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு தனியாக 3.5% இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யப்பட்டது. மேலும் இதே ஆண்டில் "சிறுபான்மையினர் நல இயக்குநரகம்" உருவாக்கப்பட்டது மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. "உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" 2009 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மேலும், இதே

ஆண்டில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதிகள் முதல் முறையாக துவங்கப்பட்டது. இவ்வரசால் மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கும் சட்டம் 2010ல் இயற்றப்பட்டது.

இம்மக்களின் முன்னேற்றத்திற்காக, இவ்வரசு பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்திய அரசின் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 2007 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் இயக்ககம் தொடங்கப்பட்டது. சிறுபான்மையினருக்கு அதிகாரமளிக்கும் வகையில் நீதிபதி ராஜிந்தர்

சச்சார் குழுவின் பரிந்துரைகள் பின்பற்றப்படுகின்றன. சிறுபான்மையினருக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (பிஎம்ஜேவிகே) திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சிறுபான்மையின மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்திய அரசின் கல்வி உதவித்தொகைகள் வழங்குதல், விடுதிகள் நடத்துதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு இவ்வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று

2022-ல் கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலனுக்காக "கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ மகளிர் உதவி சங்கங்கள் மூலம் ஆதரவற்ற, விதவைகள் மற்றும் வயதான முஸ்லிம்/கிறிஸ்தவ பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. கிறித்துவர்களுக்கு ஜெருசலேம் புனிதப் பயணம் செல்லவும் மற்றும் முஸ்லிம்கள் ஹஜ் புனித பயணம் செல்லவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மசூதிகள் மற்றும் தேவாலயங்களை பழுதுபார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் நிதி உதவி வழங்கப்படுகிறது மற்றும் தமிழ்நாடு வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேஷ் இமாம்,

மோதினார்கள், அரபு ஆசிரியர்கள் மற்றும் முஜாவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் உருவாக்கப்பட்டது. இவற்றில், இலக்கு-1 (வறுமையை ஒழித்தல்), இலக்கு 4- (தரமான கல்வி) மற்றும் இலக்கு-10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியவை இத்துறையுடன் நேரடியாக தொடர்புடையதாகும். இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இத்துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

## 2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு

தனி இட ஒதுக்கீடு வழங்கக்கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களை அரசு பரிசீலித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டு நிறைவேற்றி தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward

procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

### 3. கல்வி உதவித் தொகை

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு - குறள் 392

பள்ளி முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் ஒன்றிய அரசின் கீழ்க்காணும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும்
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத்திட்டம்

இக்கல்வி உதவித்தொகை திட்டங்கள் 100% ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலங்களின் சிறுபான்மையினர் மக்கள் தொகையின் (2011) அடிப்படையில் நிதி ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்கண்ட திட்டங்களின் கீழ், கல்வி உதவித் தொகை நேரடி பயன்மாற்று முறையில் (Direct Benefit Transfer) மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக

செலுத்தப்படுகிறது. மொத்த கல்வி உதவித் தொகையில், ஒவ்வொரு சிறுபான்மையின உட்பிரிவில் குறைந்தபட்சம் 30 விழுக்காடு மாணவிகளுக்கு ஒதுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் வசிக்கும் ஒரு மாணவர், அவர் படிக்கும் இடத்தின் அடிப்படையில் அல்லாமல் அவரின் சொந்த மாநிலத்திற்கான ஒதுக்கீட்டின் கீழ் மட்டும் உதவித் தொகை பெற தகுதியுடையவராவார்.

**கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு**

| கல்வி உதவித் தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு | கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி |
|---|---|---|---|
| பள்ளிப் படிப்பு | 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ. 1 இலட்சம் | முந்தைய ஆண்டின் இறுதி |

| | | | |
|---|---|---|---|
| பள்ளி மேற் படிப்பு | 11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | ரூ. 2 இலட்சம் | தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். |
| தகுதி (ம) வருவாய் அடிப்படை | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | ரூ. 2.5இலட்சம் | |

### 3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2008-2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, 2021-2022 ஆம் ஆண்டு வரை ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு செயல்படுத்தப்பட்டு வந்தது. ஒன்றிய அரசு, கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி தொடக்கக்கல்வி (1 முதல் 8 ஆம் வகுப்பு வரை) அனைத்து குழந்தைகளுக்கும் அரசாங்கம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதை

கட்டாயமாக்கியுள்ளது என்று தெரிவித்து 2022-2023 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதை நிறுத்தி, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்குகிறது. இவ்வரசு, மேற்கண்ட ஒன்றிய அரசின் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களை விட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியலின் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்ததேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும்

நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| **விவரம்** | **விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்** | **விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர்** |
|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை சேர்க்கைக் கட்டணம் | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.500 (இவற்றில் எது குறைவோ) | |
| ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கற்பிப்பு கட்டணம். | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3,500 (இவற்றில் எது குறைவோ) | |
| ஒரு கல்வியாண்டில் 10 மாதங்களுக்கான பராமரிப்பு கட்டணத் தொகை ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை | ரூ.6,000 | ரூ. 1,000 |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 1,07,247 விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மேல்நிலைப் பள்ளிக் கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஒரு வருடத்தில் இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களை விட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்ததேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே

கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| **விவரம்** | **கற்பிப்பு மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ.** | **பராமரிப்புகட்டணம் (10 மாதங்களுக்கு)** | |
|---|---|---|---|
| | | **விடுதியில் தங்கி பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.** | **விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர்** |
| 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஒரு ஆண்டிற்கு ரூ.7,000 (இவற்றில் எது குறைவோ) | 3,800 | 2,300 |

| | | | |
|---|---|---|---|
| 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு, தொழில்நுட்ப தொழிற் / கல்வி படிப்புகள், ஐடிஐ, ஐசிடி (என்சிவிடி) பாலிடெக்னிக், செவிலியர் டிப்ளமோ, ஆசிரியர் பயிற்சி போன்றவை. | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.10,000 (இவற்றில் எது குறைவோ) | 3,800 | 2,300 |
| இளநிலை / முதுகலை பட்டப்படிப்புகள் (தொழில்நுட்பம் / தொழிற்கல்வி தவிர) | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.3,000 (இவற்றில் எது குறைவோ) | 5,700 | 3,000 |
| எம்.பில் மற்றும் பி.எச்.டி | - | 12,000 | 5,500 |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 99,008 விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்பம் / தொழிற் கல்வி பயிலும் தமிழகத்தை சார்ந்த ஒன்றிய அரசால்

அறிவிக்கப்பட்ட மதவழி சிறுபான்மையினராக கருதப்படும் இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. பட்டியலிடப் பட்ட கல்வி நிலையங்களுக்கு (ஐஐடி, ஐஐஎம் போன்றன) கல்வி உதவித் தொகைகள் முதலில்

ஒப்பளிக்கப்படும். பிற மாணவர்களுக்கு தகுதி அடிப்படையில் அதாவது முந்தைய படிப்பு தேர்வில் (மேல்நிலை / பட்டப்படிப்பு) அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. மதிப்பெண்கள் சமமாக இருப்பின், பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே

கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இக்கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி) - சென்னை
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (என்.ஐ.டி) - திருச்சி
3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, டிசைன் & மேனுஃபேக்சரிங் (ஐஐஐடிடி & எம்) - காஞ்சிபுரம்
4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி (என்.ஐ.எஃப்.டி) - சென்னை
5. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் (ஐஐஎம்) - திருச்சி

உள்ளிட்ட 85 கல்வி நிறுவனங்களில் (Listed Institutions) பயிலும் சிறுபான்மையின மாணவ,

மாணவியருக்கான கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படுகிறது.

ஏனைய அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்விக் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| **விவரம்** | **விடுதியில் தங்கி பயிலும் மாணவ / மாணவியர்** | **விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ / மாணவியர்** |
|---|---|---|
| கல்வி கட்டணம் | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.20,000 இவற்றில் எது குறைவோ | |
| பராமரிப்பு கட்டணம் (10 மாதங்களுக்கு மட்டும்) | ஆண்டுக்கு ரூ. 10,000 | ஆண்டுக்கு ரூ. 5,000 |
| பட்டியலிடப்பட்ட கல்வி நிறுவனங்கள் (ஐஐடி, ஐஐம், முதலான) | செலுத்தப்பட்ட கல்வி கட்டணம் முழுவதும் மாணவ, மாணவியருக்கு திருப்பி செலுத்தப்படும் (உச்சவரம்பின்றி) | |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 10,154 விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.4 பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித்தொகை

பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித்தொகை திட்டம் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு சிறுபான்மையின விவகார அமைச்சகத்தின் மௌலானா ஆசாத் கல்வி அறக்கட்டளை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையின சமூகத்தை சார்ந்த கல்வியில் சிறந்து விளங்கும் மாணவியரை அங்கீகரித்து அவர்கள் உயர்கல்வியினை தொடர்ந்து பயில ஊக்கம் அளிக்கப்படுகிறது.

சிறுபான்மையினருக்கான பிற கல்வி உதவித் தொகை திட்டங்களுடன் இணைந்து விரைவாக செயல்படுத்தும் நோக்கில் இத்திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வி உதவித் தொகை இணையத்தில் (National Scholarship Portal) இணைக்கப்பட்டு ஒன்றிய அரசின் 100% நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.5,000- மும், 11 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.6,000-மும் மாணவிகளின் வங்கி கணக்கில் நேரடி பயன் மாற்று முறையில் வழங்கப்படும். இந்த கல்வி உதவித் தொகையில் சேர்க்கை கட்டணம், கற்பிக்கும் கட்டணம், புத்தகங்கள், எழுது பொருள்

மற்றும் உண்டி உறைவிட செலவினங்கள் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 12,119 விண்ணப்பங்கள் மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 4. சிறுபான்மையினர் விடுதிகள்

சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை தொடர்ந்து பயில ஏதுவாக, இலவச உண்டி உறைவிட வசதியுடன் 18 சிறுபான்மையின விடுதிகளை இவ்வரசு நடத்தி வருகிறது. விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| விடுதி | விடுதிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கல்லூரி | 9 | 900 | 688 |
| பள்ளி மற்றும் கல்லூரி | 5 | 250 | 207 |
| பள்ளி | 4 | 350 | 203 |
| **மொத்தம்** | **18** | **1,500** | **1,098** |

மொத்தமுள்ள 18 விடுதிகளில் 1 விடுதி மாணவர் விடுதி, 17 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும். இவ்விடுதிகளில் சேருவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாம் வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்காக ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மீட்கப்படும் குழந்தை தொழிலாளர்கள் விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கி பயிலவும் அனுமதிக்கப்படுவர்.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரளா எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத்

தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழியின் அடிப்படையில் விடுதியில் அனுமதிக்கப்படுவர்.

2021-2022 ஆம் ஆண்டில், 14 கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### 4.1 உணவுக்கட்டணம்

அரசால் உணவுக் கட்டணமாக விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு

மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1100 ஆகவும் ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில், விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுப் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டு, மாற்றம் செய்யப்பட்ட திருத்திய உணவுப் பட்டியல் 03.06.2022 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

பண்டிகை நாட்களில் (கிறிஸ்துமஸ், ரம்ஜான், பக்ரித், மஹாவீர் ஜெயந்தி மற்றும் புத்த பூர்ணிமா) சிறப்பு உணவு கட்டணமாக, ஒரு பண்டிகைக்கு பள்ளி மாணவ, மாணவியருக்கு

ரூ.40-ம், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.100 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.150 ஆகவும் மின்னணு பரிமாற்றம் மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.409.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.459.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.
2. விடுதியில் தங்கி பயிலும் மாணவ/மாணவியருக்கு 12 ஆம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறை மூலம் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.
4. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.
5. 14 கல்லூரி விடுதிகளில் ரூ.14 இலட்சம் செலவில் "செம்மொழி நூலகங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன.
6. 14 கல்லூரி விடுதிகளில் ரூ.10.85 இலட்சம் செலவில் E-Library அமைக்கப்பட்டன.
7. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

8. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் மூன்று முறை மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.
9. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள்(tumbler) வழங்கப்படுகின்றன
10. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடைகள் வழங்கப்படுகிறது.
11. விடுதிகளில் அவசர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.
12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின் அரைப்பான், நீர் சுத்திகரிப்பு கருவி, சுகாதார குட்டைத்தகளி,

தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்பு புத்தகங்கள் உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிகலன் வழங்கப்படுகின்றன.

13. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/ தேனீர் வழங்கப்படுகின்றன.

14. விடுதி மாணவ, மாணவியருக்கு ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

15. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன் கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும்

நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

### 4.3 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 18 சிறுபான்மையினர் விடுதிகளில் 11 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 2 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 விடுதிகளுக்கு மாணவ, மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

### 4.4 விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள்

பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப் படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூ.8 இலட்சம் செலவில் 5 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**5. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்**

ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி அவர்களுக்கு உதவும்பொருட்டு கர்நாடக நவாப் அவர்களால் "முகமதியன் கோஷா விதவை சாரிட்டி" என்ற பெயரில் 1.10.1892ல் ஒரு சங்கம் துவங்கப்பட்டது. பின்னர் இதன் பெயர் " முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்" என்று

மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கம் 12.08.1976-இல் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

2007 ஆம் ஆண்டில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டன. தற்போது அனைத்து 38 மாவட்டங்களிலும் தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் உள்ளன. இத்துடன் மேலும் கூடுதலாக 3 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 41 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில்

செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு

வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

2022-2023 ஆம் ஆண்டு முதல் சென்னை முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் சிறுபான்மையினர் நல இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இச்சங்கங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ. 249.13 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.433.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்**

அனைத்து 38 மாவட்டங்களிலும் தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனுடன் கூடுதலாக

3 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 41 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான கிறித்துவ விதவைகள், மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் கிறித்துவ மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும்

வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது. இச்சங்கங்கள், சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சங்கங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.162.57 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.297.54 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009-ஆம் ஆண்டில் இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள் தர்காக்கள், அடக்கஸ்த்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்களை பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு

செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் 1,364 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 15,327

நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 153 பயனாளிகளுக்கு ரூ.14.84 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித்தொகை |
|---|---|---|
| 1 | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்<br>அ. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ. 1,00,000 |
| | ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |

| | | |
|---|---|---|
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.20,000 |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.5, 000 |
| 4 | கல்வி உதவித்தொகை அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |

| | | |
|---|---|---|
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500 |
| | மாணவர் இல்ல விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.5,000 |
| | ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு | ரூ.4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |

| | | |
|---|---|---|
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஓ. ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5 | திருமண உதவித்தொகை<br>ஆண்கள்<br>பெண்கள் | ரூ.3,000<br>ரூ.5,000 |
| 6 | மகப்பேறு உதவித்தொகை<br>அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு) | ரூ.6,000 |
| | ஆ. கருச்சிதைவு / கருக் கலைப்பு | ரூ.3,000 |

| | | |
|---|---|---|
| 7 | மூக்கு கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | ரூ.500 (அதிகபட்சம்) |
| 8 | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000 |

இவ்வாரியத்தில் இதுவரையில் 4,632 பயனாளிகளுக்கு ரூ.195.76 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.51.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.1 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குதல்**

2022-2023 ஆம் ஆண்டில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு ரூ.543.64

இலட்சம் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**7.2 பதிவுபெற்ற வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்**

வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க வாகனத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000 இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக ரூ.703.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 66 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## 8. கிராமப்புற சிறுபான்மை மாணவியர்களுக்கான ஊக்கத்தொகை வழங்குதல்

கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்பதற்காகவும், தொடக்கக் கல்வி அளவில் சிறுபான்மைப் பெண் குழந்தைகளின் இடைநிற்றலைக் குறைக்கவும், சிறுபான்மையின பெண் குழந்தைகளுக்கான கிராமப்புற பெண் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் புதிதாக துவங்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் சிறுபான்மையினர் மாணவிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.500-ம் மற்றும் 6 ஆம் வகுப்பு படிக்கும் மாணவியர்களுக்கு ரூ.1,000-ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.275.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. சிறுபான்மையினருக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பயனடையும் வகையில் 1,000 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.61.60 இலட்சம் செலவில் வாங்கி வழங்க ஆணையிடப்பட்டு, முதன்முறையாக மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 10. 5 புதிய மாவட்ட சிறுபான்மையினர் அலுவலகங்கள் துவங்குதல்

சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், ரூ.175.05 இலட்சம் செலவில் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 11. ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு

வருகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இவற்றில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ரூ.60,000-ம் இதர நபர்களுக்கு ரூ.37,000-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ.825.60 இலட்சம் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.233.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேவாலயங்கள் புனரமைப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும், வழங்கப்படும் மானியம் ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தொன்மையான மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம், தஞ்சாவூர் ஸ்வார்ட்ஸ் தேவாலயம், சேலம் கிறிஸ்து தேவாலயம் உள்ளிட்டவை புதுப்பிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 19 மாவட்டங்களில் உள்ள 30 கிறித்துவ

தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.77.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.1,000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல்

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசால் ரூ.100 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**14. கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்**

கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைத்திட ஆணையிடப்பட்டது. மேலும் உறுப்பினர்களை பதிவு செய்வது மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து 18.01.2023-ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**15. மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல்**

மறுவாழ்வு நிதியுதவி வழங்கும் திட்டம், இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக

சிறைதண்டனை பெற்றவர்கள் உள்ளிட்டோர், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறை சென்று வெளிவந்த 14 நபர்களுக்கு ரூ.1.40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**16. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிர்ணயிக்கும் இலக்குகளில், சிறுபான்மையினரின் மக்கள் தொகைக்கு ஏற்ப, உரிய பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில்,

பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி கற்பதற்கான வசதிகளை வழங்குதல், கடனுதவி வழங்குதல், வீடுகளுக்கான வசதிகளை உருவாக்குதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் மதநல்லிணக்கத்தை பேணுதல் ஆகியன இத்திட்டத்தின் முதன்மை குறிக்கோள்கள் ஆகும்.

வெவ்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தை கண்காணிக்கவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட

ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**16.1 பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டங்கள்**

1. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்;
2. பள்ளிகல்வியை பெறுவதற்கான வாய்ப்பு ;
3. உருது மொழியை கற்பிப்பதற்கான வசதி ஏற்படுத்தல் ;
4. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல்;
5. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை;
6. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக் கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துவது ;
7. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்;
8. தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல்;

9. பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவி;
10. மாநில மற்றும் மத்திய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு;
11. ஊரக வீடு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு;
12. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப்பகுதிகளின் நிலையை மேம்படுத்தல்;
13. இனக்கலவரங்களைத் தடுத்தல்;
14. இனக்கலவரத்தினை தூண்டுவோர் மீது குற்ற விசாரணை நடத்துதல் மற்றும்
15. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர் -களுக்கு மறுவாழ்வு வழங்குதல்.

## 17. பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் )

பிரதம மந்திரியின் சிறுபான்மையின-ருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம

மந்திரியின் ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும், ஏற்ற தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள்

(25% சிறுபான்மையினர் மக்கள் தொகை உள்ள பகுதிகள்) என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டமானது 15 கிலோமீட்டர் சுற்றளவில் 25% அதிகமாக சிறுபான்மையினர் அதிகம் வாழும் செறிவூட்டப்பட்ட பகுதிகளில் முன்மொழியப்படும்.

இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு

திட்டங்களுக்கும், அவற்றில் 33-40 சதவீதம் பெண்கள் / பெண் குழந்தைகளுக்கான கட்டமைப்புகள் / வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (Smart Class), அரசு தொழிற்பயிற்சி நிலையம்/தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல், பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்கலைக் கழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள

மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பத்து மாவட்டங்களில் ரூ.61,575.41 இலட்சம் மதிப்பீட்டில் 62 திட்டங்களை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசு பங்களிப்பாக ரூ.18,422.22 இலட்சமும் மற்றும் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.12,281.48 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.30,703.70 இலட்சம் நிதி 2022-2023 ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.30,703.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து

கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மை இத்துறையின் மூலம் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இணையவழி மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த தனி இணையதளம் உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சிறுபான்மையினர் நல இயக்குநரகம் முனையக துறையாகும் (Nodal Department).

## 19. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மை-யினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும்

நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மதநல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம் 28.06.2021 முதல் 3 ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களை தலைவராகவும், திரு எம்.எம். அப்துல் குத்தூஸ் அவர்களை துணைத் தலைவராகவும் மற்றும் 8 உறுப்பினர்களுடனும் செயல்பட்டு வருகிறது.

சிறுபான்மையினரின் பிரச்சனைகளை கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு

பகுதிகளை பார்வையிட்டு நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்திட அரசுக்கு தக்க பரிந்துரைகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செய்து வருகிறது. சிறுபான்மையின மக்கள் மற்றும் சிறுபான்மையின நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை, தேவைப்படின் அழைத்து நேரடி விசாரணை செய்து அவர்கள் அளிக்கும் கோரிக்கைகள் மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளை இந்த ஆணையம் பெறுகிறது.

2022 ஆம் ஆண்டில், “சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா” மாநில அளவில் டிசம்பர் 18-ம் தேதி மதுரையில் கொண்டாடப்பட்டது.

## 20. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் சிறுபான்மையினர்களான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தவர்கள், பார்சிகள் மற்றும் சமணர்கள் ஆகியோர் நலனுக்காக அவர்கள் சிறு வணிகம்/ வியாபாரம் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி வருகிறது. இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. சிறுபான்மையின மக்களின்

பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்நிறுவனம் காலக்கடன், சிறுகடன் மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன் உதவிகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இக்கழகம் வழங்கும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி ஓராண்டு காலத்திற்கு வழங்கப்பட்டது. தற்போது 2022-2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி 3 ஆண்டு காலத்திற்கு (2022-2023 லிருந்து

2024-2025 வரை) வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடன்களை உரிய நேரத்தில் பெற இயலும். பல்வேறு திட்டங்களின் கீழ் நல்ல முன்னேற்றம் ஏற்பட இதன் மூலம் வழிவகை ஏற்படும்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

தனிநபர் காலக் கடன், விரசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) , சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் மற்றும்

கல்விக் கடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசிய கழகத்தின் பங்கு - 90 %

டாம்கோவின் பங்கு - 5 %

பயனடைவோரின் பங்கு - 5 %

### 20.1 தனிநபர் காலக்கடன் திட்டம்

சுயவேலை வாய்ப்புகள் உருவாக்குவதை ஊக்கப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்ய தனிநபர் காலக் கடன்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I<br>ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம் II<br>ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 8%<br>பெண் - 6% | திட்டம் -I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 3,413 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,455.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 20.2 விராசாத் -கைவினை கலைஞர் கடன் திட்டம்

விராசாத் - கைவினை கலைஞர் கடன் திட்டம், தனிநபர் காலக் கடன் திட்டத்தின் ஒரு உட்பிரிவாகும். இத்திட்டத்தின் கீழ், கைவினை கலைஞர்களுக்கு மூலதன பொருட்களான உபகரணங்கள்/ கருவிகள்/ இயந்திரங்கள் வாங்குவதற்கு, குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **திட்டம் I**<br>ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 5%<br>பெண் - 4% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | **திட்டம் II**<br>ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 6%<br>பெண் - 5% | திட்டம் -I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

## 20.3 சுய உதவிக் குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆண் மற்றும் பெண் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன்

வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எ ண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **திட்டம் I** ரூ.1 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | **திட்டம் II** ரூ.1.50 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண் - 10%<br>பெண் - 8% | திட்டம்-I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம் 5,358 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.3,057.35 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**20.4 கல்விக் கடன்**

அரசு /அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் "தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **திட்டம் I**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| | ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் "தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | | |
| 2 | **திட்டம் – II** இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், | மாணவர்களுக்கு - 8%<br><br>மாணவியர்களுக்கு -5% | திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | | |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 14 மாணவ, மாணவியருக்கு ரூ.15.21 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இக்கழகத்தின் மூலம் அனைத்து திட்டங்களிலும் மொத்தம் 8,785 பயனாளிகளுக்கு ரூ.5,528.06 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 21. தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழிவழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும் தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்குதொகை (Authorised Capital) ரூ.900 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய சட்டம் 2010, பிரிவு-2 (d) –ன் கீழ் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு தெலுங்கு,

உருது, கன்னடம், மலையாளம், சௌராஸ்டிரம் மற்றும் மராத்திய ஆகிய மொழிகளை தாய்மொழியாக கொண்டவர்களை மொழிவழி சிறுபான்மையினர் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இக்கழகத்திற்கு செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக ரூ.500 இலட்சமும், விதைத் தொகையாக ரூ.1,000 இலட்சமும் சம்பளம் மற்றும் இதர நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1,609.20 இலட்சம் நிதியினை அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**22. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்**

வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான

அலுவல்களை நிருவகிப்பதற்காகவும் வக்ஃப் சட்டம் 1954-ன்படி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18.01.1958-இல் அமைக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்தின்படி (மைய அரசு சட்டம் 43/1995), 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வாரியம் திருத்தியமைக்கப்படுகிறது. தற்போது வாரியம் 9 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. திரு எம். அப்துல் ரஹ்மான் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக, வாரிய உறுப்பினர்களால் 22.07.2021 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு 11 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

**22.1 குறிக்கோள் மற்றும் பணிகள்**

வக்ஃப் சட்டம் 1995-இன்படி வக்ஃப் சொத்துக்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்வதில் பங்காற்றுதல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களுடன் நெருக்கமாக செயல்பட்டு அவைகளின் செயல்பாட்டினை மேம்படுத்துதல் ஆகியன வாரியத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம் பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவு (ஆவணங்கள்) பேணுதல்.
2. வக்ஃப் சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்தல்.

3. வக்ஃப் நிர்வாகத்திற்காக அவ்வப்பொழுது அரசு வழங்கும் ஆணைகளை பின்பற்றுதல் மற்றும் கட்டளையிடுதல்.
4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் தீட்டிக்கொடுத்தல்.
5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் பட்ஜெட்டை ஆய்வு செய்தல்.
6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்.
7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்.
9. வக்ஃப் நிதியை நிர்மானித்தல்.
10. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கேட்டல்.

11. வக்ஃப் சொத்துக்கள், கணக்குகள் ரிகார்ட்டுகள், வக்ஃப் நாமாக்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்.
12. வக்ஃப் சொத்தின் தன்மை பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃப் சொத்துக்களை அளவை செய்தல்.
13. வக்ஃப்களைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இவை நீங்கலாக, அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களை பெரிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு நிதி வழங்குதல், உலமாக்கள் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் விவாகரத்தான முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற

உத்தரவுகளின்படி வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம்.எஸ்.எஸ்.வக்ஃப் வாரிய கல்லூரி இயங்கி வருகிறது.

**22.2 வக்ஃப் பதிவு**

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின் கீழ் 6,628 வக்ஃப்கள் உள்ளன. அதில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 3,215 வக்ஃப்கள் ஆகும். இவற்றில், 2022-2023-ஆம் ஆண்டில் 213 வக்ஃப்கள் பதிவு செய்யப்பட்டன. 3,413 வக்ஃப்கள் பதிவு செய்யப்படாதவை ஆகும்.

## 22.3 வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம் 1995, பிரிவு 4-இன்படி வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காக நில அளவை ஆணையரை வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையராக நியமனம் செய்யப்பட்டனர். வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார்கள்.

அரசு உத்தரவுப்படி மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954ம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கும்

ஏற்கனவே ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்களின்படி அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 22.4 வக்ஃப் சொத்துக்களின் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் 6,628 வக்ஃப் நிறுவனங்கள் உள்ளன. இவ்வக்ஃப் நிறுவனங்களுக்கு 63,322 சொத்துக்கள் உள்ளன. இவற்றில் சில சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலும் சட்ட விரோதமாக பரிவர்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சில வக்ஃப் சொத்துக்கள் வக்ஃப் நிறுவனங்களின் கீழ் இருந்தாலும் அத்தகைய சொத்துக்களுக்கான பட்டா மூன்றாம் தரப்பினரின் பெயரிலும் உள்ளது.

வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக பரிவர்த்தனை மேற்கொள்ளப்படாமல் பாதுகாக்கவும், இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களின் பெயரில் சட்டபூர்வமாக மீட்டெடுக்கவும், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், வக்ஃப் வாரிய தரவுத்தளத்தை தமிழ் நிலம் மென்பொருளில் பதிவேற்றம் செய்து தற்போதைய வருவாய் பதிவேடுகளுடன் பொருத்தவும் மற்றும் அதனை சரி செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு தேவையான உதவிகளை அளித்து வக்ஃப் சொத்துக்களை பாதுகாப்பதற்கு உறுதுணையாக உள்ளது.

**22.5 வக்ஃப் தீர்ப்பாயம் அமைத்தல்**

வக்ஃப் சட்டம் 1995 இன் பிரிவு 83 இன் படி, வக்ஃப் அல்லது வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக, தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தை அமைத்தது. இத்தீர்ப்பாயம், மாவட்ட நீதிபதியை தலைவராகவும், கூடுதல் மாவட்ட குற்றவியல் நடுவருக்கு இணையான மாநில குடிமை பணி அலுவலர் நிலையில் ஒரு உறுப்பினரையும், முஸ்லீம் சட்டம் மற்றும் நீதித்துறை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவரை மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ் நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தின் வழக்குகள் விவரம்:-

| 31.03.2022 வரை நிலுவையில் இருந்த வழக்குகள் | 2022-2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | மொத்தம் | 2022-2023ல் தீர்ப்பளிக்கப் பட்டவை | தற்போது நிலுவையி லுள்ள வழக்கு கள் |
|---|---|---|---|---|
| 2,300 | 260 | 2,560 | 428 | 2,132 |

## 22.6 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வக்ஃப்கள்

வக்ஃப் சட்டம், 1995 இன் பிரிவு 65 இன் படி நிர்வாக காரணங்களுக்காக, சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுக்கப்பட்டு, நேரடி நிர்வாகத்தின் கீழ் வக்ஃப்களை நிர்வகிக்க நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 2022-2023-ஆம் ஆண்டு துவக்கத்தில் 55 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்தன. இவற்றில் வாரிய உத்தரவின்படி 2022-

2023-ஆம் ஆண்டில் 14 வக்ஃப் நிறுவனங்களின் நேரடி நிர்வாகத்தினை விலக்கி தேர்வுற்ற மற்றும் நியமிக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், 15 வக்ஃப் நிறுவனங்கள் வாரியத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது 56 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

## 22.7 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துகக்ளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54 மற்றும் தமிழ் நாடு பொது சொத்துக்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டம், 1975 ஆகியவற்றின் கீழ் வக்ஃப் சொத்துக்களை

மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் ரூ.52 கோடி மதிப்பிலான வக்ஃப் சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டு சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 22.8 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.2.5 கோடி மாநில அரசு நிர்வாக மானியமாக வழங்குகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 2022-2023-ஆம் ஆண்டு முதல், வசூலித்த சகாயத் தொகை அடிப்படையில் 5% ஊக்கத் தொகையை கூடுதல் மானியமாக வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டன.

## 22.9 தமிழ்நாடு வக்ஃப் வாரிய சரக அலுவலங்கள் கட்ட மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பூந்தமல்லி, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகிய 8 சரக அலுவலகங்களுக்கு தலா ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த கட்டிடம் கட்டுமானம் மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி, முதற்கட்டமாக பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய நான்கு சரக அலுவலகங்களின் கட்டுமான பணிகள் மேற்கொள்ள ரூ.64 இலட்சம் வழங்கப்பட்டது. இவற்றில் கடலூர் சரக அலுவலக கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 22.10 மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு பராமரிப்பு தொகை வழங்குதல்

வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 77(4)(g)-ன்படியும் மற்றும் முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4 (2)ன்படியும், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## 22.11 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### 22.11.1 பெரிய அளவிலான சீரமைப்பு மற்றும் பழுதுபார்ப்பு மானியம்

மசூதிகள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களில் பெரிய அளவிலான

பழுதுபார்ப்பதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்குகிறது. இத்திட்டம் 1999-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மானியம் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டு 77 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, 2023-2024 ஆம் ஆண்டில் பெரும் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம் குறிப்பிடத்தக்க அளவில் ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 22.11.2 தொகுப்பு நிதி – வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பதற்கு

மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பெரிய பழுது மற்றும் சீரமைப்பு

பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் திரட்டப்படும் வட்டியானது தேவைப்படும் மற்றும் தகுதியான வக்ஃப் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படும்.

### 22.11.3 உலமா ஓய்வூதிய திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏழை பேஷ் இமாம்கள், மோதினார்கள், அரபு ஆசிரியர்கள், தமிழ்நாடு வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற முஜாவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற, 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணி

முடித்தவர்களுக்கும், மாற்றுத் திறனாளியாக இருப்பின் 50 வயது நிரம்பிய மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களும் தகுதியுடையவர்கள் ஆவர். மாற்றுத் திறனாளி உலமாக்களுக்கான வயதினை 50-லிருந்து 40-ஆக 15.06.2022 முதல் தளர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. உலமா ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு தற்போது உலமா ஓய்வூதியம் மாதம் ரூ.3,000 வீதம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் உள்ள உலமா அனுமதிக் குழு உலமா ஓய்வூதியம் வழங்குவதற்கான அனுமதி வழங்கும் அதிகார அமைப்பாகும். தற்போது, 1,399 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் இவ்வனுமதிக்

குழுவால் 153 உலமாக்களுக்கு புதிதாக ஓய்வூதியங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.540 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22.11.4 உலமா குடும்ப ஓய்வூதிய திட்டம்**

உலமா ஓய்வூதியதாரர் இறப்பின், அவரது வாரிசுதாருக்கு உலமா ஓய்வூதியதாரர் கடைசியாக பெற்ற ஓய்வூதியத்தில் 50% தொகையினை உலமா குடும்ப ஓய்வூதியமாக அளிக்கும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது வரை 11 உலமா குடும்ப ஓய்வூதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 3 நபர்களுக்கு உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**22.11.5 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்.**

தமிழ்நாட்டில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000 மதிப்பூதியம் வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிடப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு 32 காஜிகளுக்கு அரசால் ரூ.76.80 இலட்சம் வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.76.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22.12 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் மத்திய வக்ஃப் கழக உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்**

**22.12.1 கௌமி வக்ஃப் போர்டு தரக்கியத்தி திட்டம்**

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைப்படுத்தும் விதமாக வக்ஃப் வாரிய பணிகளில் திறன் மேம்பாட்டினை

கொண்டு வர புதுடெல்லி, மத்திய வக்ஃப் கழகத்தால் “**கௌமி வக்ஃப் போர்டு தரக்கியத்தி திட்டம்**” தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது, இத்திட்டத்தின் கீழ் கணினி உதவி புரோகிராமர், சட்ட அலுவலர்கள், கணக்காளர், நில அளவையாளர்கள், சரக வக்ஃப் அலுவலர் ஆகியோர்களை நியமிக்க வேண்டியும், வக்ஃப் சொத்துக்களை GIS முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், வக்ஃப் முத்தவல்லிகளின் பணிகள் மற்றும் மத்திய அரசால் வழங்கப்படும் திட்டங்களின் வாயிலாக வக்ஃப் சொத்துக்களில் அபிவிருத்தி மேற்கொண்டு வக்ஃபின் வருவாய் பெருக்கும்

வழிவகைகளுக்குண்டான பயிற்சி முகாம்களை முத்தவல்லிகளுக்கு நடத்திடவும் மத்திய வக்ஃப் கழகம் உதவி வருகிறது. இதன்படி, மத்திய வக்ஃப் கழகம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ.1.02 கோடி மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.86 இலட்சம் மற்றும் 2021-2022 ஆண்டிற்கு ரூ.83.81 இலட்சம் மானியமாக வழங்கி இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்களை 100% கணினிமயமாக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. மேலும் 15,794 வக்ஃப் சொத்துக்கள் GPS/GIS Mapping செய்யப்பட்டு 15,794 வக்ஃப் சொத்துக்களும் தற்பொழுது மத்திய வக்ஃப்

கழக இணையதளம் www.wamsi.nic.in-இல் பார்வையிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 22.12.2 வக்ஃப் சொத்துக்களை ட்ரோன்களை (Drone) பயன்படுத்தி மேப்பிங் செய்தல்

தமிழ்நாட்டில் ட்ரோனைப் பயன்படுத்தி வக்ஃப் சொத்துக்களை ஜி.பி.எஸ்/ஜி.ஐ.எஸ். மேப்பிங் செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது.

மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் ரிமோட் சென்சிங், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை ஆகியவை 20,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS mapping பணிகளை ரூ.44 இலட்சம் செலவில் மேற்கொள்ள மும்முனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 05.01.2022-இல் கையெழுத்திடப்பட்டுள்ளன. மேலும், மத்திய

வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம் புவியியல் துறை ஆகியவற்றுடன், 25,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS Mapping பணிகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 04.03.2022-இல் செய்யப்பட்டுள்ளன.

**22.12.3 சஹாரி வக்ஃப் சம்பத்தி விகாஸ் யோஜனா**

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வக்ஃப் கழகத்தால் கடன் வழங்கப்படுகிறது.

- அபிவிருத்தி மேற்கொள்ளும் இடமானது எவ்வித வில்லங்கமும் இல்லாதிருத்தல் வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி அல்லது திட்ட மதிப்பீட்டில் 75% எது

குறைவானதோ அத்தொகை கடனாக வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் தொகையில் 8% நிர்வாக செயலாக்க கட்டணமாக மத்திய வக்ஃப் கழகத்தால் வசூலிக்கப்படும்.

மத்திய வக்ஃப் கழகத்தின் இணைய தளம் www.centralwaqfcouncil.gov.in-ல் விவரங்களை அறிந்து கொள்ள தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முத்தவல்லிகளுக்கும் வக்ஃப் சரக அலுவலர்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள 21 வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ.3.06 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 22.12.4 தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO)

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியாக மேம்படுத்துவதற்கு தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் (NAWADCO) நிதி உதவி வழங்கி வருகிறது. இதன் மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகித்தாச்சார அடிப்படையில் தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் மற்றும் தொடர்புடைய வக்ஃப்

நிறுவனம் ஆகியன குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**23. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு**

சவூதி அரேபியாவிலுள்ள புனித மக்கா நகருக்கு ஹஜ் பயணம் மேற்கொள்பவரின் பயண ஏற்பாடுகள் மற்றும் தங்குமிட ஏற்பாடுகளை நல்லமுறையில் மேற்கொள்ள 2002 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் ஹஜ் குழு சட்டம் (மைய அரசு சட்டம் 35/2002) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, அரசால், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள குழு, 2020 ஆம் ஆண்டு 12 உறுப்பினர்களை கொண்டு அரசால் திருத்தியமைக்கப்பட்டது.

## 23.1 மாநில ஹஜ் குழுவின் பணிகள்

1. தற்போதுள்ள ஒன்றிய சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, இந்திய ஹஜ் குழுவானது 100% நிகழ்நிலை (online) மூலம் ஹஜ் விண்ணப்பங்களை விருப்பமுள்ள பயணிகளிடமிருந்து பெறுதல்.

2. ஒதுக்கீட்டிற்கு மேல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக பெறப்பட்டால், மனுதாரர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

3. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய பயணக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் குறித்து உரிய அறிவுரைகளை விண்ணப்பதாரர்களுக்கு அளித்தல்.

4. சிறந்த தங்குமிடங்களை தேர்ந்தெடுப்பதற்காக இந்திய உதவித் தூதரகத்திற்கு உதவிடும் பொருட்டு, பிரதிநிதிகளை கட்டிடத் தேர்வுக் குழுவில் அனுப்புதல்.

5. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

6. ஹஜ் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் புனிதப் பயணிகளுக்கு தேவைப்பட்டால் (ஹஜ்) கடவுச்சீட்டை பெறுவதற்கு மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.

7. தமிழ் மொழியில் ஹஜ்ஜும் உம்ராவும் என்ற கையேட்டியினை அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்.

8. ஒன்றிய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்களுடனும் மற்றும் பிற நிறுவனங்களான சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் பணிகளை

ஒருங்கிணைத்து ஹஜ் விமான ஏற்பாடுகளை சீரிய முறையில், சிக்கலின்றி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.

9. சென்னை-ஜித்தா-சென்னை நேரடி ஹஜ் விமானங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் உதவி ஏற்பாடுகளான தங்கும் வசதி மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி முதலியவற்றை அளித்தல்.

10. புனிதப் பயணிகள் பயனடையும் பொருட்டு, தடுப்பூசி மற்றும் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பல்வேறு மாவட்ட/வட்ட தலைமை இடங்களில் நடத்துதல்.

11. ஹஜ் புனிதப் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

### 23.2 ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகள்

ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் / இந்திய

ஹஜ் குழுவின் வழிமுறைகளின்படி, விண்ணப்பங்களுக்கான அழைப்பு, இந்திய ஹஜ் குழுவிற்கு செலுத்தவேண்டிய கட்டணங்கள் குறித்து அறிவுரைகள் அளித்தல், பயண ஆவணங்களை வழங்குதல், சென்னையில் தற்காலிக தங்குமிட வசதி அளித்தல் முதலிய பல்வேறு பணிகளை தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இக்குழு மேற்கொள்கிறது.

மேலும் விமான இயக்கம், தங்குமிடங்களில் சோதனைக் கூடங்கள், குடியேற்றம் மற்றும் சுங்கத் தீர்வு, தங்குமிடங்கள் மற்றும் விமான தளம் ஆகியவற்றில் பாதுகாப்பு, விமான தளத்திற்குச் செல்ல பயணிகளுக்கு போக்குவரத்து வசதி

முதலான இதர பணிகளையும் இக்குழு ஒருங்கிணைத்து செயலாற்றுகிறது.

இந்திய ஹஜ் குழுவின் முழுமையான அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு செயல்படுகிறது. பயணிகளைத் தேர்ந்தெடுத்தல், பயணிகளுக்கான பயண அட்டவணையை இறுதி செய்தல், தங்குமிடங்கள் ஒதுக்குதல் முதலிய நேர்வுகளில் வெளிப்படைத் தன்மையுடன் இக்குழு செயல்படுகிறது.

### 23.3 மீண்டும் சென்னையை புறப்பாட்டுத் தளமாக அறிவித்தல்

ஹஜ் 2022 ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாக, ஒன்றிய அரசு இந்தியாவிலுள்ள ஹஜ் விமான புறப்பாட்டு தளங்களை 20-லிருந்து 10 ஆக குறைத்தது.

அதன் விளைவாக, தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு "கொச்சி" புறப்பாட்டுத் தளமாக நியமிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், 1,672 ஹஜ் பயணிகள் கொச்சி பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள். கொச்சி செல்வதால் ஏற்படும் பயண சிரமத்தை கருத்திற்கொண்டு, சென்னையை மீண்டும் புறப்பாட்டுத் தளமாக அறிவிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு ஒன்றிய சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சர் ஆகியோரை கேட்டுக் கொண்டார்கள். இதன் பயனாக, தற்போது தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு சென்னையை ஒரு புறப்பாட்டுத் தளமாக ஒன்றிய சிறுபான்மை விவகாரத்துறை அறிவித்துள்ளது.

## 23.4 அரசால் வழங்கப்படும் மானியங்கள்/ உதவிகள்

### 23.4.1 மாநில அரசின் ஹஜ் மானியம்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் மூலம் முதல்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. 2022- ஆம் ஆண்டில், ஒரு நபருக்கு ரூ.27,628 வீதம் தகுதியுள்ள 1,649 ஹஜ் பயணிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு தமிழ்நாடு அரசு ஹஜ் மானியத் தொகையாக ரூ.4.56 கோடி வழங்கியுள்ளது. இத்தொகையானது ஹஜ் புனித பயணிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டில் ஹஜ் புனித பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டத்திற்காக ரூ.1,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23.4.2 நிர்வாக மானியம்**

தமிழக அரசால் அளிக்கப்படும் நிதி உதவிகளைக் கொண்டு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, பணியாளர்களுக்கான நிருவாக செலவினத்தை மேற்கொள்கிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய செலவினங்களை மேற்கொள்ள, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, ஒவ்வோர் ஆண்டும் ரூ.50 இலட்சத்தை நிர்வாக மானியமாக தமிழக அரசு வழங்குகிறது. அதன்படி, 2022-2023 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக

ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2023–2024 ஆம் ஆண்டிற்கும், நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23.4.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டிடத் தேர்வு குழுவில் உறுப்பினர்களை அனுப்புவதற்கு மானியம்**

பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகளை தங்க வைக்க கட்டிடங்களைத் தேர்வு செய்வதற்கான கட்டிடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கான செலவினத்திற்காகவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. 2022–ஆம் ஆண்டில், 11 ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டார்கள்.

2022-2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.21.93 இலட்சம் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23.4.4 இதர மானியங்கள்**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் சில உபகரணங்களை வாங்க, ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது. அதன்படி, 2022-2023 ஆம் ஆண்டில், ஒரு மடிக்கணினி வாங்குவதற்கு ரூ.90,000 தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில்

கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தையும் தமிழக அரசு ஈடு செய்கிறது.

**முடிவுரை**

சிறுபான்மையினரை கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்படுத்திட இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், அதற்கான ஒதுக்கீட்டை உயர்த்துவதன் மூலமும், சிறுபான்மையினருக்கான வளர்ச்சியை இந்த அரசு விரிவுபடுத்தி வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை தொடரும் வகையிலும், சிறுபான்மையினரின் சட்ட மற்றும் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், இவ்வரசு தொடர்ந்து செயலாற்றும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**

**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்**

# இணைப்பு

## 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் ஹஜ் குழு | 3250.90 | - | - | 3250.90 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 88.35 | - | - | 88.35 |
| சிறுபான்மையினர் நல இயக்ககம் | 3612.72 | 31403.73 | - | 35016.45 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 108.60 | - | - | 108.60 |
| **மொத்தம்** | **7060.57** | **31403.73** | - | **38464.30** |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2022-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் ஹஜ் பயணம் மேற்கொண்ட ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியத் தொகை வழங்கப்பட்டது.



மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால்
22.11.2022 அன்று சிறுபான்மையினருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டன.



மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.08.2022 அன்று கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவிகள் வழங்கப்பட்டன.

## தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்



தனிநபர் கடன் - பவர் லூம் இயந்திரம் ;
கடன் தொகை ரூ.7,60,000



தனிநபர் கடன் - சோளார் பேட்டரி கடை ;
கடன் தொகை ரூ.7,60,000



தனிநபர் கடன் – தையல் தொழில் ;
கடன் தொகை : ரூ.2,00,000



தனிநபர் கடன் – மிதிவண்டிக்கடை ;
கடன் தொகை: ரூ-2,00,000




மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 17.12.2022 அன்று சிறுபான்மையினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு 12.08.2022 அன்று மிதிவண்டிகள் வழங்கினார்கள்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.